138

138

138

MSK 32

திரு. ஜே. எல். அனந்தய்யர்,
~~செவ்வாய் பேட்டை~~, [illegible] 4, நம் 1/2
சேலம்.
"கை முறை வைத்திய கட்டு-2"

Total Pages 15
Verification completed
Sunderaraman
17.9.64

Sir,
Palm leaf returned to [illegible] on 28.12.63
31-1-64.
[illegible]
7/2/64

(138) கைமுறை வைத்திய கட்டு - 2

தேதி: 31.12.63.
ஓலைச் சுவடியின் பெயர்:-" கை முறை வைத்தியம் கட்டு-2".
உரிமையாளரின் பெயர்: ஜே.எல்.அனந்தய்யர்.
இடம்: ~~செவ்வாய்ப் பேட்டை,~~ சேலம்.
திருச்சிபுரம்
***

138

மேகத்துக்குச் சூரணம்:-

திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், செவியம், சித்திர மூலம், கருஞ்சீரகம், கற்கடக சிங்கி, நல்ல சீரகம், கொத்தமல்லி, சதகுப்பை, பெருங்காயம், வெள்ளி, உள்ளி, வசம்பு, நேர்வாளம், பருப்பு, அப்பிசாரம், சத்திச்சாரம், நவச்சாரம், வெங்காரம் பஞ்ச லவணம், நிலவேம்பு, பேய்முசுட்டை, சீந்தி வேர், புங்கம் வேர், மருள் கிழங்கு, வெருகங் கிழங்கு, காட்டு முருங்கைப் பட்டை, சிறுநெருஞ்சி வேர், சிவதை வேர், கடை சரக்கு இருபது வகையும் ஒரு நிறையாய் நிறுத்துச் சூரணம் பண்ணிக் முன் பண்ணின சூரணம் ரெண்டு பங்கு சிவதைச் சூரணம் ஒரு பங்கும் கூட்டிக் கலந்து தேனிலாவது, நெய்யிலாவது, வென்னீரிலாவது, வெருகடிப் பிரமாணம் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி உடம்பு கூடுப்பு, பெருவயறு, அழுவை, நீர்க் கோவை, பாண்டு ரோகம், காமாலை உடம்பு வக்கம், லிங்க பாகம், கர்ச்சல், மேல் வக்கம், உள்மாந்தை, அசீரணம், வாந்தி வயறெடுப்பு, வாயில் ரெத்தம் விழுகிறது மேக ஜென்னப் பட்டதுக்கும் ஆகுதும் இதுக்கு சிறந்தி பண்டமாகாது. இருபது நாள்க் கொள்ளவும்.

சூதக வாய்வுக்கு மருந்து:-

கொடிப் பிளிச்சான் பிடி.க, ஈர வெங்காயம் நல்ல சீரகம், அந்தப் பிளிச்சானை இடித்து இந்த மருந்தை அரைத்துக் கூடப் போட்டுச் சம்பஞ் சோத்துத் தண்ணீர் வார்த்து அதைச் சீலையில் வடிகட்டி இடித்து நேரமொன்றுக்கு கால்படி தண்ணீர் குடிக்கவும் இந்தப் பிறகாரம் மூன்று நாள்க் கொள்ளவும். இதுக்கு புகை, புளி தவிர்க்கவும். சூதக வாய்வு தீரும். இது கை கண்டது.

சிரங்குக்கு என்ணை மருந்து:-

விளக் கென்ணை படி.$\frac{1}{4}$, எருக்கம் பால் படி.$\frac{1}{2}$, ஊமத்தை யிலைச் சாறு படி.$\frac{1}{4}$ இது மூன்றும் ஒன்றாய்ச் சேர்த்து என்ணைச் சட்டியில் வார்த்து ஒரு வறகா யெரித்து சிவந்து வருகிற பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவும். மறுநாள் பழைய சோறு சாப்பிட்டு அந்த என்ணை மேலே தேய்க்கவும். மத்தியானத்துக்கு எருமைச் சாணி கொண்டு வந்து மேலே தேய்த்துக் குளுந்த தண்ணீர் வார்க்கவும். இந்தப் பிறகாரம் மூன்று நாள் தேய்த்துச் தண்ணீர் விடவும். எந்த சிரங்கும் உதிர்ந்து போகும். இது கை கண்டது.

காமாலைக்கு மருந்து:-

கையாந் தகரைத் தழை பழி.உ, சுக்கு, வெள்ளுள்ளி, மிளகு வகை ஒன்றுக்கு விராகனிடை.க, வெள்ளாட்டுக் கோமியம் படி.5, இந்த மருந்து நாலும் அரைத்துக் கோமியத்தில் கலந்து கொடுக்கவும். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் வென்னீருஞ் சோறும் மூன்று நாள் கொள்ளவும். நாலு நாள் பத்தியம் முறிக்கவும் இதுக்கு காமாலை எல்லாந் தீரும். இது கை கண்டது.

காட்டு மருந்து:-

பங்கிலவு
நத்[illegible] வேர ஞாயிறுக் கிழமை பிடிங்கி வந்து நருக்கிச் சரட்டில் கோத்துக் கையில் [illegible] கையில் சட்டவும். காமாலை தீரும்.

பிள்ளை யில்லா மலட்டு வலிக்கு மருந்து என்ணை:-

[illegible] எருக் தானிப் பூண்டு இருபது கொண்டு வந்து இடித்து என்ணையில்ப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். முழுக்கு [illegible] நாலா நாள் இந்த என்ணையை யிடித்துக் கால்படி மூன்று பங்கு பகுந்து மூன்று நாள்க் [illegible] இதுக்கு மலட்டுப் புழு செத்து விழும். பிள்ளை உண்டாம். இதுக்குப் பத்தியம் மூன்று நாள் இருக்கவும். நாலா நாள் பத்தியம் முறிக்கவும். இது கை கண்டது.

சயத்துக்கு [illegible]

[illegible] திறந்து ஒரு காய்க்கு பதினஞ்சு தேத்தான் கொட்டை [illegible] மூடி ரெண்டு நாள் இருக்க விட்டு அந்தத் தேத்தான் கொட்டையை [illegible] பண்ணிக் காய வைக்கவும். [illegible] வேர் பலம்.உ, [illegible] வேர் பலம்.உ, ஆத்து முள்ளி வேர் பலம்.உ, இந்த மருந்தை மூன்று தேத்தான் கொட்டையும் கூடப் போட்டு இடித்து சூரணம் பண்ணிக் [illegible] குடுக்கையி லடைத்து வைக்கவும். இது கொள்ளுகிற போது ரெண்டு பணவிடை தேனில் [illegible] தினம் பணவிடை அதிகமாய்க் கொள்ளவும். பத்தியம் பசுவின் பாலுஞ் சோறும். பசுவின் நெய்யும் வாழைக் கச்சலும் தின்னவும். உப்பு, புளி தவிர்க்கவும். [illegible] புட்ட தெல்லாந் தீரும். இது கை கண்டது.

நீல கண்ட ரசம்:-

நாவி வெள்ளைப் பாசாணம், கெவுரி பாசாணம், அரிதாரம், மனோசிலை,

வெங்காரம், துத்தம், துருசு இது வெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்துக் கட்டி இதுப்பைக் கட்டி இதில் பாதி நேர்வாளம் இதில் பாதி சூடு சுண்ணாம்பு இதில் பாதி ரசம் இதில் பாதி, கெந்தகம் இதில் பாதி இது வெல்லாங் கூடக் கலந்து மிளகு, தக்காளிச் சாத்திலொரு நாள் மத்திச்சு மறுநாள் காவாளைச் சாத்தில் ஒரு நாள் மத்திச்சு மறுநாள் பாகலைச் சாத்தி லொரு நாள் மத்திச்சு மறுநாள் தும்பைச் சாத்திலொரு நாள் மத்திச்சு மறுநாள் ஊமத்தை இலைச் சாத்திலொரு நாள் மத்திச்சு மறுநாள் கையயாந்த கரைச் சாத்திலொரு நாள் மத்திச்சுக் குண்டுமணி இலைச் சாத்தி லரைத்து மிளகு பிரமாணம் குளிகை செய்து நிழலிலுத்தி வைத்துக் கொண்டு விச மென்னப் பட்டதுக்கு ஒரு உருண்டை முலைப்பாலில் உரைத்துக் கொடுக்கவும். ஒரு சாமத்தில் நிற்கும். விரியன் கடி முதலான விஷத்துக்கு ஒரு உருண்டை வென்னீரிலிட விஷந் தீரும். மித மிஞ்சித் தலை மண்டை கொண்டால் ஒரு உருண்டை நாலிலொரு பங்கு உரைத்து கலிக்கமிடவும். நசியம் விடவும். பிடரியில் தேய்க்கவும். சவ் மெழுந்திருக்கும். கடிவாயில்த் தடவவும். இந்த மருந்துக்கு பத்தியம் உப்பு, புளிப்புத் தவிர்க்கவும். வென்னருஞ் சோறும் குடிக்கவும். இந்த மருந்து கை கண்டது.

<u>படு தாமரை வண்டு கடிக்கு:-</u>

கொடிக் கள்ளிச் சருகு சுட்டு விளக்கெண்ணையில் கலந்து தடவத் தீரும்.

<u>நீர்க் கட்டுக்கு கல்லடைப்புக்கு மருந்து:-</u>

தவசி, முருங்கை யிலை கொண்டு வந்து இடித்துப் பசுவின் பாலில் பிசைந்து வடி கொண்டு கொடுக்கவும். நீர்க் கட்டுக் கல்லடைப்பு இது யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>மூலத் தான் விழுகிற ரெத்தத்துக்கு மருந்து:-</u> விழுமிச் சாறு பசுவின் தயிரில் கொடுக்கவுந் தீரும.

<u>தேளுக்கு மருந்து:-</u>

மனிதன் காதில் இருக்கிற குரம்பியை எடுத்து எருக்கம் பால் விட்டு சாரித்து அந்தக் கடி வாயிலே தடவத் தேள்கடி தீரும்.

(வேறு)

பேய்க் குமட்டி வேரிலே தமரிட்டு அந்த தமரிலே ஒரு விராகனிடை ரசம் விட்டு வைத்து மூன்று நாள் விட்டு நாலா நாள் பார்த்தால் பூமியை விட்டு மேலே எழும்பி இருக்கும். அதை எடுத்து எருக்கிலைப் பாலிலொரைத்துப் போட விஷந் தீரும். இது கை கண்டது.

<u>தேத்தான் கற்பம்:-</u>

இளந் தேத்தான் காய் கொண்டு வந்து உரலில் துவைத்து நிழலிலுத்திச் சூரணஞ் செய்து புதுக் கலயத்தில் போட்டு வைத்துக் கொள்ளவும். இதை வெருகடிப் பிரமாணம் பசுவின் பாலில் கொள்ள வயித்து நோவு தீரும். தலை வலிக்கு மோரில் கொதிக்க வைத்து நெத்தியிலை பூச பெருவயறு பாண்டுரோகம் காமாலை யீளைஇருமல், விக்கல், யேப்பம், வாந்தி, சோகை, பித்த பாண்டு ரோகம் இது வெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது. இந்தச் சூரணத்தை நெய்யில் குழப்பி நசியம் பண்ணித் தலை முழுக நேத்திர வாய்வு தீரும். இந்தச் சூரணம் ஒரு பலம் தேவதாரம், கடுகு, இந்துப்பு ஒரொன்றுக்கு விராகனிடை, கட்டிச் சூரணம் தின்றுதின்ன மேக மென்னப் பட்டதெல்லாந் தீரும். வெள்ளை பிரமியம் வெட்டை, சோகை இதுக்கு இளநீரில் இந்தச் சூரணம் விராகனிடை கலந்து கொடுக்கவும். தீரும். பத்தியமில்லை.

<u>பிரமியத்துக்கு மருந்து:-</u>

அமுக்கிரான் வேர் வெள்ளாட்டுப் பாலிலரைத்து எட்டு நாள் கொள்ளத் தீரும்.

(வேறு).

செப்பு நெருஞ்சி வேர், பொன்னுங்கண்ணி வேர் இது வெல்லாம் வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கப் பிறமியந் தீரும்.

<u>வலி குன்மத்துக்கு மருந்து:-</u>

சுக்கு, மிளகு, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு ஒரொன்றுக்கு பலம். ¼, வறுத்த நறுக்கி தேங்காய் கண் துறந்து இந்தத் தூளை எல்லாம் போட்டு சதிரக் கள்ளிப் பால் வார்த்து முளைக் குச்சியடித்து இதுக்கு அநுபானம் வாழைப் பழத்திலாவது வெல்லத்திலே யாவது கட்டித் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி வலிகுன்மம், எரிகுன்மம், குலை குன்மம், வாய்வு குன்மம், சத்தி குன்மம், எட்டுந தீரும். இதுக்குப் பத்தியமில்லை.

<u>சன்னி வாத சுரத்துக்கு:-</u>

முந்திரிகைப் பழமும், கொம்புத் தேனும் குழப்பி நாவில்த் தடவவும்.

<u>இதுக்கு கசாயம்:-</u> கல் முத்தக் காசு, விஷ்டுணு காந்தி, சிறுகாஞ் சொறி, சுக்கு, கண்டங்கத்திரி வேர், சீந்தித் தண்டு இது வெல்லாங் கசாயம் வைத்து கொடுக்கவும். சன்னி வாத சுரம் தீரும். உப்பு, புளித் தவிர்க்கவும். வென்னீரும் சோறும் தின்னவும்.

அருவைக்கு மருந்து:-

பேய்க் குமட்டி பருச்சாறு, நேர்வாளங் கொட்டை பத்து, திப்பிலி காசிடை.5, மிளகு காசிடை.5, இந்துப்பு பலம்.உ, கல்லுப்பு பலம்.½, பொட்டிலுப்பு பலம்.உ, வெங்காரம் காசிடை.உ, நவச்சாரம் காசிடை.உ இது வெல்லாங் கூட்டி இடித்து விளக் கெண்ணெ உரி வார்த்து இதை எல்லாம் வேக வைத்துப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு தேத்தாங் கொட்டை பிரமாணம் குளிகை செய்து இதை வாழைப் பழத்தில் வைத்து முழுங் கவும். இப்படி 20 நாள் தின்னவும். இதுக்கு பத்தியம் புகை புளி ரெண்டும் ஆகாது. அருவை தீரும்.

பிள்ளையில்லாத பேருக்கு மருந்து:-

பசுவின் பால் படி.½, கோமியம் படி.½, அதின் சாணப் பால் பலம்.க, அதின் நெய் பலம்.க, இதுக்கு கடைச் சரக்கு கொடிவேலி வேர், சுக்கு, மிளகு, கடுக் காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு முள்ளி வேர், கடுகுரோகணி, முந்திரிகைப் பழம், மஞ்சள், மரமஞ்சள் வசம்பு, ஏலரிசி, லவங்கப் பட்டை இது வெல்லாம் விராகனிடை கூட்டி இடித்துச் சூரணம் செய்து ஒரு பாக்களவு உள்ளுக்கு கொள்ளவும். இருபது நாள் தின்னவும். இதுக்கு சூளி நிற்கும். தப்பாது! பத்தியமில்லை.

மலட்டு வலிக்குக் குளிகை:-

கழச்சிக் கொழுந்து அதின் பட்டை அதின் பருப்பு ஒரொன்றுக்கு விராகனிடை.க, பதினெந்து மிளகு, வெள்ளுள்ளி விராகனிடை.உ, பெருங்காயம் பயறு மருவாதி நவச்சாரம் விராகனிடை.க, இது வெல்லாம் தண்ணீர் படாமல் அரைத்துச் சிறு உருண்டை செய்து சூதக வலி யெடுத்தால் மூன்று நாளும் இந்த மருந்தைக் கொடுக்கவும். இதுக்கு மிளகு சாறும் சோறுந் தின்னவும். வெந்நீர் கையில் தொடவும். மலட்டுப் புழுச் செத்து விழும். சூளி நிற்கும்.

வயத்திலே பிள்ளை செத்தால் மருந்து:-

சுங்கம் வேர், நாயுருவி வேர் அரைத்து இள வெந்நீரில் கரைத்துக் கொடுக்கவும் பிள்ளை விழும்.

தள்ளப் பிள்ளை விழ மருந்து:-

ஏலம், சுக்கு, முசுமுசுக்கை இலை கொண்டு வந்து உரலில் யிடித்து வெந்நீரில் பிசைந்து வடி கொண்டு இந்தக் கடைச் சரக்கை அரைத்து கூடப் போட்டுக் கலந்து உள்ளுக்கு கொடுக்கவும். பிள்ளை செத்து விழும். ஒரு மாதம் நின்று இருந்தால் ஒரு நாள் கொடுக் கவும். ரெண்டு மாதம் நின்றால் ரெண்டு நாள் கொடுக்கவும். இப்படிக் கணக்குப் பார்த் துக் கொடுக்கவும். இது கை கண்டது.

பிள்ளை யில்லாதவர்க்கு மருந்து:-

வசம்பு, வெள்ளுள்ளி, மிளகு, குப்பை மேனியிலை அரைத்துக் கொடுக்கவும். தலை முழுகிப் போவாள். மூன்று நாள் ஆவாரைக் கொழுந்து ஒரு படி, கம்பரிசி அரைபடி இந்த ரெண்டும் இடித்துத் தின்னவும். இந்தப்படி மூன்று நாள்த் தின்னவும். இதுக்கு சூளி நிற்கும். இது கை கண்டது.

மாசு விழாதவர்க்கு மருந்து:-

சிறுகீரை வேரைப் பிடுங்கி வந்து ஒரு பிடி சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் வார்த்து அதை வேக வைத்து அதை இறக்கி ஆற விட்டுப் பிசைந்து அந்தத் தண்ணீரை அரைப்படி உள்ளுக்குக் கொடுக்க மாசு விழும். இது கை கண்டது.

பிரமியத்துக்கு மருந்து:-

சங்கம் வேர்ப் பட்டை, சிரந்தி நாயகம், மிளகு, தக்காளி, நல்ல சீரகம், கருஞ்சீரகம், நெல்லிப் பட்டை, முள்ளிப் பட்டை இது வெல்லாம் ஒரொன்றுக்கு விரா கனிடை அரைத்து துளசிக் கசாயம் விட்டுக் கலந்துக் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள்க் கொள்ளவும். பிரமியந் தீரும். இதுக்கு புகை புளி உப்பு ஆகாது.

வெள்ளைக்கு மருந்து:-

அரசம் பட்டையை யிடித்து வெள்ளாட்டுப் பாலில் நற்சீரகம் ஈர வெங்காயம் அரைத்துக் கூடப் போட்டு பிசைந்து வடிகட்டி ஒரு பலம் சர்க்கரை கூடப் போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வெள்ளை தீரும்.

எண்பது வாதத்துக்கு மருந்து:-

எருக்கம் வேர் நாட்டு முருங்கை வீட்டு முருங்கை வேர், தேவதாரம், பச்சை மஞ்சள், நிலக்கடம்பு, சமூலம் கடுகு வெள்ளாட்டு கோமியம் இது வெல்லாம் ஒரு நிறையாய் எடுத்து சிறுநீரில் அரைத்து எண்ணெயும் வார்த்துக் கோமியம் விட்டுச் சாரித்து பூசவும். இந்தப்படி மூன்று நாள் பூசவும். எண்பது வாதமுந் தீரும்.

மேகத்தின் பேரில் கண்ட வெள்ளைக்கு:-

ஊத்தம் அரிசி பொரிச்சுக் கொள்ளவும், செங்கல் பொடி யெரு தரம் வடி கொண்டு ஒரு நிறையாய் நிறுத்து பாகிலைச் சாறு வார்த்து அரைத்து நீர் சுண்டிய பதத் தில் பசுவின் வெண்ணெ யிட்டு இழைத்துக் கண்ணில் போடவும். இந்த முறைக்கு எட்டு நாள்

போடவும். இதுக்கு மேகத்தின் பேரில் கண்ட வெள்ளை தீரும்.

நாசிகா பற்பம் :-

சீனிக் காரம் ஆலைந் திப்பிலி சுண்ணம்பு ஒரொன்று விராகனிடை.க, வெள்ளைச் சுண்டை வேர் விராகனிடை.6 இது வெல்லாம் காய விட்டு சூரணம் பண்ணி வைத்துக் கொள்ளவும். ஒரு பணவிடை நாசியில் விட்டால். ஆயிரந் தும்ம லெடுக்கும். இதுக்கு சன்னி யென்னப்பட்டது தீரும்..

அரையாப்புக்கு எண்ணை :-

ரசம் விராகனிடை.க, நெல்லிக்காய், கெந்தகம் விராகனிடை.4, வெத்திலைச் சாறு படி.$\frac{1}{2}$, விளக்கெண்ணை படி.$\frac{1}{2}$ இதை யெல்லாம் அரைத்துச் சீலையில் பிடித்து திரியாய்ப் பிடித்து அந்தத் திரியைக் கொளுத்தினால் தயிலம் விழும். அந்த தயிலத்தைப் புண் வாயிலே போடவும். சீலை மேலே போடவும். அரையாப்புத் தீரும்.

நத்தான் விஷத்துக்கு மருந்து :-

வில்வப் பழத்து உள்ளு விராகனிடை.க, மலை கிளுவை இலை பிடி.க, ஆவாரந் தழை பிடி.க, ஈர வெங்காயம் பிடி.க, நாலையும் இடித்து எருமை மோரில் பிசைந்து கொடுக்கவும் தீரும்.

விஷத்துக்கு பறணிமை :-

சுந்திர நாபி, நெரிவிஷம், மனோசிலை, அரிதாரம், இந்துப்பு, பெருங்காயம், பிரதம், நெல்லிக்காய்க் கெந்தகம், ஒரொன்றுக்கு விராகனிடை.உ, இதுக்கு நேர்வாளம் விராகனிடை.30, கருப்புட்டி விராகனிடை:16, தேங்காய் கொட்டங்கச்சிச் சரி விராகனிடை.16 இதை யெல்லாம் சமன்கட்டி வேலிப் பருத்திச் சாறு விட்டு ஏழு நாள் அரைக்கவும். ஒவ்வொரு சாமம் அரைக்கவும். நீர் வத்தினால் பிறகு தேங்காய் நெய் விட்டு அரைக்கவும். எட்டா நாள் வழித்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும். இந்த மையை விரியன் கடி முதலான விஷத்துக்கு ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். பேய் நாய், பேய்நரி கடித்தால் ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். மாட்டுக்கு சொக்கு விஷம் கண்டால் ஒரு பணவிடை நாக்கில் தேய்த்துத் தண்ணீர் வார்க்கவும். இந்த மருந்துக்கு பத்தியம் குடித்த அன்றைக்கு உப்பு, புளி தவிர்க்கவும். வெந்நீரும் சோறும் கொள்ளவும். மறுநாள் பத்தியம் முறிக்கவும். கண்டமாலை வவுத்திரம் நாலுக்கும் முலைக் குத்துக்கும் தாமரைச் சிலந்திக்கு இதுக் கெல்லாம் உள்ளுக்கு ஒரு பணவிடை கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். ஒரு பணவிடை மை யெடுத்துச் சீலையில் ஊட்டிப் புண் மேலே போடவும். இப்படி மூன்று நாள் போடவும். முளை என்னப் பட்டதெல்லாம் பிதுங்கி விழும். தீரும். இது கை கண்டது. இது பொய் போகாது.

கண்டமாலைக்கு ~~என் பெட்டகத்து~~ எண்ணை :-

வெள்ளைக் குங்கிலியம் வேப்பம் பட்டை ஒன்றான்றுக்கு விராகனிடை.க, வேப் பெண்ணை அரை உழக்கு இந்த மருந்து ரெண்டையும் இந்த எண்ணையில் போட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மறுநாள் புண்ணு மேலே சீலையில் பிடித்துப் போடவும். புண் வாயிலும் ஊட்டவும். இப்படிக்கு மூன்று நாள் போடவும். எந்தப் புண்ணுக்கு போட்டாலும் ஆறிப் போகும். இது கை கண்டது. இது முக்கியமாய்ச் செய்து பார்க்கவும். இதில் பலன் உண்டு. ~~இது முக்கியமாய்ச் செய்து பார்க்கவும். இதில் பலன் உண்டு.~~

முக சன்னிக்குப் புல்லுருவிக் கற்பம் :-

எட்டி மேல் புல்லுருவியைக் கொண்டு வந்து நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் கொள்ளவும். மேக சன்னி தீரும். தீராவிட்டால் தேனில் கொள்ளத் தீரும். மேக வாய்விக்கு சுக்கு கசாயத்தில் கொள்ளத் தீரும். அண்ட வாய்வு அந்திர வாய்வுக்கு ஆவாரம் பட்டை வெட்டி வந்து கசாயம் வைத்து இந்தச் சூரணம் ஒரு விராகனிடை போட்டுக் கொடுக்கவும். இப்படிக் கால் மண்டலம் கொடுக்கவும். இந்த வாய்வுந் தீரும். இதுக்கு இச்சா பத்தியமா யிருக்கவும். அவ பத்தியமா யிருப்பது ஆகாது.

நேத்திர வாய்வுக்கு எண்ணை :-

நல்லெண்ணை படி.க, மிளகு படி.$\frac{1}{4}$, ஆதண்டந் தழைச் சாறு படி.$\frac{1}{2}$, அமுக்கிராச் சாறு படி.$\frac{1}{2}$, மிளகு தக்காளிச் சாறு படி.$\frac{1}{2}$, இது மூன்றும் எண்ணை யில் விட்டு அடுப்பில் வைத்து தண்ணீர் சுண்ட வேக விட்டுப் பதத்தில் மிளகு நுணுக்கிப் போட்டு இறக்கிக் கசாயத்தில் வடித்து மறுநாள் முழுகவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் முழுகவும். இப்படி மூன்று நாள் முழுகவும். தீரும் வியாதி நேத்திரம் மண்டை இடிப்பு, கண் சிவப்பு தீரும்.

சன்னிசிக் குழம்பு :-

கற்பங் கடுக்கா யிந்துப்பு நற் பெருங்காயம் நல்ல வெங்காரம்
மெப்புள்ள சூதகம் மேவும் மனோசிலை திப்பிலி அரிதாரம் கருஞ் சீரகத்துடனே
ஒப்புடன் கடுகுரோகணி நாவி அப்படி மருந்து அதில் பனிரெண்டு யிப்படி நேர்
வாளம் இதுக்கு சரி சமம் கூட்டி ஒப்புடன் நஞ்சு உயிர் முளை வாங்கி நல்லா யின

Incomplete

வருப்பாய் அஞ்சாமல் வறுத்துச் சூரணம் செய்து வஞ்சியாம் பலிலேச் சாத்திலொரு நாள ரைத்து கொர்ஞ்சிய தென்னங் குடுக்கைக் கரிதான் அஞ்சு விராகனிடை அது நிறை கருப்புக் கட்டி துஞ்சிய தேங்காய்ப் பாலிலொரு நாளரைத்து மிஞ்சிய பதத்தில் லெடுத்துச் சிமிளிலடைத்து வரும் பிணி நோய்கள் வகைதனை அறிந்து உத்த வறுபானம் உரைத்திடக் கேளீர் - வெள்ளை அக்கிரங்கள் வித மேகங் கருத்த அக்கிரங்கள் கண்ட மெறு தோசத்துக்கு நாவில்ப் பனவிடை நன்றாகத் தேய்த்து கூவிய வெந்நீர் குடிநீர் குடிப்பீர் சப்பிலை தோசம் சந்வ சுரமும் வெந்நீரில் கொள்ள விட்டருண்டோடுமே கடுக்காய்க் கசாயத்தில் காசிடை கொள்ள யிடுக்குச் சுரமும் யிருபதுந் தீரும் முடுகிய குளிர் மூதேவிச் சுரம் அடுக்குச் சுரமும் அல்லாந் தீரும் கொன்னைக் கொழுந்து குரு கடுக்காய்ப் பொடியில் என்னை முலைப்பால் எதமுடன் கொடுக்கச் சன்ன யிருமல் சங்கடந் தீரும் உச்சிதமாகுஞ் சிச்சிலிப் பட்டையில் மெச்சிய குளம்பு ஒரு விராகனிடை யிட அச்சினம் செயம் அடைவுடன் தீரும் சத்தி குன்மம் தகரை கசாயத்தில் பித்த குன்மம் பிளி யெலைக் கசாயம் வாய்வு குன்மம் வல்லாரைக் கசாயத்தில் எரி குன்மம் எலுமிச்சம் பழத்தில் பயித்திய குன்மம் பசுவின் மோரில் அண்ட வாதம் ஆட்டுப் பாலில் பண்டிய பொருமல் பக்கச் சூலைகள் தின்று விடும் பசுவின் நெய்யில் செயம் பெறக் குடிப்பீர் குன்றி நோவு சூலை வலி எரிச்சல் தின்றிடும் பசுவின் நெயில் செயம் பெற கொடுப்பீர் கல்கண்டு சர்க்கரை கால்படி இளநீர் மெப்புடன் உடன் தீரும். சூலை பதினெட்டுக்கும் பறங்கிப் பட்டைக் கசாயத்தில் காசிடை குழம்பு யினமுடன் கொடுப்பீர் சுருள்ளி சுக்கு யிதமுடன் மிளகு சீரகம் கசாயத்தில் செயம் பெறக் கொடுக்க குதக வாய்வும் சுகமுடன் தீரும் மூல வாய்வு தாதுக்கும் மூக்கு வலிகள் காலமே பசுவின் நெய்யில் இனமுடன் கொடுப்பீர் ரத்த மூலத்துக்கு நயனஞ் சீமூலத்துக்கு மெத்தப் பனவிடை குழம்பு விருசுடன் (மேல் தொடர்ச்சி அடுத்த யேடு இல்லை). Incomplete

<u>விஷத்துக்கு குளிகை</u>:-

வரிக் குமட்டிக்காய் நாறு கொண்டு வந்து நாலாக அறுத்து புதுப் பானையில் போட்டு வேகவைத்து ஆறவிட்டு புழிந்து அதின் ரசம் படி.உ, சிறுகுறிஞ்சா வேர் இடித்துச் சூரணம் படி.௬, தலை சுருளைத் தழையும் குப்பை மேனித் தழையும் ரெண்டையும் இடித்துச் சாறு பிழிந்து இந்த மருந்தை எல்லாம் கூடப் போட்டுப் பிசைந்து வைத்து ஏழு நாள் ஏழு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் சுண்டைக்காய் பிரமாணம் குளிகை சேர்த்து வைத்துக் கொண்டு சகல விஷத்துக்கும் விரியன் கடி முதலானதுக்கும். ஒரு உருண்டை வெந்நீரில் கொடுக்கத் தீரும். எலி கடிக்கு சாறனை மிளகு இந்த மருந்து அரைத்துக் கொடுக்கத் தீரும். மாடு சொக்கிறதுக்கு உரைத்துக் கண்ணிலிடவும். எட்டி ஒடு வை தின்ன பேருக்கு உரைத்துக் கண்ணிலிடவுந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>சகல மாந்தத்துக்கும் குளிகை</u>:-

பெருங்காயம் விராகனிடை.4, ஓமம் விராகனிடை.உ, நல்ல சீரகம் விராகனிடை.உ, மிளகு விராகனிடை.உ, கடுகு விராகனிடை.4, ஒரு கட்டைப்பூடு விராகனிடை.8, வெள்ளைப் பெருங்காயம் விராகனிடை.4, வசம்பு விராகனிடை.உ, சுக்கு விராகனிடை.4 கடுகு ரோகணி விராகனிடை.4, திப்பிலி விராகனிடை.உ, மிளகு தக்காளி யிலை பிடி.உ, வேலிப் பருத்தி யிலை பிடி.உ, பாவட்டை யிலை பிடி.உ, இந்தத் தழை யெல்லாம் அரைத்து வழித்துக் கடைச் சரக்கும் அரைத்து இந்த மருந்தையும் கூடக் கலக்கி அரைத்து நாக விளங்காய்ப் பெருமன் குளிகை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு மாந்தத்துக்கு இள வெந்நீரிலிடவும். சீத மாந்தத்துக்கு ஓமக் கசாயத்திலிடவும். அக்கினி மாந்தத்துக்கு சீரகக் கசாயத்திலிடவும். கழல் முடி பிணிக்கு வெந்நீரிலிடவும். ரெண்டு குளிகை மேலுக்குத் தவளை இடவும். இந்தக் குளிகைக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>அழரத்துக்கு மருந்து</u>:-

நாய்ப் பாகல் இலையைப் பரித்து வந்து வாய் பேசாமல் கசக்கி உச்சியில் தடவி ஆண் பிள்ளையானால் வலது கையிலும் இடது காலிலும் பிறகே தடவி மனிதர் காணுமே எறிந்து போடவும். அந்தியோடே குருந்த தண்ணீரில் சீலையை தோய்த்து பிழிந்து அந்தச் சீலையை உச்சியில் துடைக்கவும். இந்தப் பிரகாரம் மூன்று நாள் தேய்க்கவும். இது கை கண்டது.

<u>கணைக்கு எண்ணை</u>:-

நகரை பழம் பாசி, வில்வம், மொசுமொசுக்கை, சிறுபுள்ளடி, மிளகு தக்காளி வல்லாரை இந்த மருந்து எல்லாம் இடித்துப் புழிந்து சாறு படி.க, ஈர வெங்காயம் அரிஞ்சது உழக்கு.க, இதுக்கு கடைச் சரக்கு சாதிக்காய், கிராம்பு, அதிமதுரம், வாய்விளங்கம், கொத்தமல்லி, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய் ஒரொன்றுக்கு விராகனிடை.க, வறுத்து ஊத்தின விளக்கெண்ணை படி.க, இந்தச் சாறும் வெங்காயமும் கூட்டி வேக வைத்துப் பதத்தில் கடை சரக்கை நுணுக்கிப் போட்டுத் துழாவி பதத்தில் இறக்கி சுலையத்தில் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணை ஒரு கரண்டி உள்ளுக்கு கொடுக்கவும். ஒரு நாளைக்கு இரண்டு தரம் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி நாங்கு கணை வங்குகணை, ரெத்தக் கணை, பசிக் கணை, வறக்கணை, இரைப்பு, யிளைப்பு இது முதலான யெட்டுக் கணையுந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>கிறந்திக்கு எண்ணை</u>:-

வறுத்து ஊத்தின விளக்கெண்ணை படி.க, வெருகங் கிழங்கு பருப்பு போலே நறுக்கினது படி.¼, ஈர வெங்காயம் உரிச்சது படி.½, இதுக்கு கடைச் சரக்கு பறங்கிப் பட்டை பலம்.க, வனமூலிகை சங்கங்குப்பி, நுணதழை, வெள்ளறுகு, சிவனார்

வேம்பு ஆக நாலும் ஒரு நிறையாய் எடுத்து இடித்துச் சாறு பிழிந்து இது படி.உ, இந்த சாத்தில் வெங்காயம் கிழங்கு கூட்டப் போட்டு என்ணெயும் வார்த்து அடுப்பில் வைத்து ஒரு விறகாய் எரித்து மெழுகு பதத்தில் இந்தப் பட்டையை நறுக்கிப் போட்டுக் கலக்கி இறக்கி கலயத்தில் வடித்துக் கொள்ளவும். இந்த என்ணெ கொடுக்கிற போது ஞாயற்றுக்கிழமை நாள் அரை உழக்கு வடித்துக் காலமே கொடுக்கவும். மூன்று நாள் கால் உழக்கு கொடுக்கவும். மறுநாள் அரைக்கால் உழக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் என்ணெ குடிச்சது. மூன்று நாள் மறு பத்தியம் மூன்று நாள். வென்னீரும் சோறும் குடிக்கவும். இப்படிப் போய் ஏழா நாள் பத்தியம் முறிக்கவும். கிறந்தி எழுந் தீரும். இது கை கண்டது.

சூதகத்தின் மேல் உதிர வாய்வுக்கு மேல் வீக்கத்துக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காயம், புடலம் பழம் ஒன்றுக்கு விரா்கனிடை.க இதை ஐந்தும் கூட்டி வென்னீர் அரைத்து உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன் நாள் கொடுக்கவும். பத்தியமில்லே. உதிர வாய்வு தீரும்.

உதிரம் விழுந்து மேல் வீக்கத்துக்கு மருந்து:-

சங்கம் வேர் தட்டினது படி.½, வெள்ளாட்டுக் கோமியம் படி.½, கடுக்காய்.5, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, சிறுஞ்சீரகம் பலம்.க, மிளகு பலம்.க, இது ஐந்தும் கோமியத்தில் போட்டு மூன்று நாள் ஊற விட்டு நாலா நாள் அதை விட்டு இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது வென்னீரில் கொள்ளவும். இதுக்கு பத்தியமில்லே. தீரும் வியாதி உதிர வாய்வு, பெரும்பாடு, உதிரத்தின் மேல் மேல் வீக்கம், காமாலே, சோகை இது முதலான வியாதி யெல்லாம் தீரும். புகை, புளி எட்டு நாள் தவிர்க்கவும்.-

விப்புருதி நாலுக்கு மருந்து:-

கல் குழஞ்சியிலே பிடி.க, புளியம் பிறன்டைக் கிழங்கு பலம்.½, பர்ருபாகல் கிழங்கு பலம்.½, ஆகாசக் கெருடன் கிழங்கு பலம்.½, உழக்கு மஞ்சி கிழங்கு பலம்.½ இது வெல்லாம் உரலிலேது வைத்து எருமை மோரில் பிசைந்து வடிகட்டி அதை உலை வைத்துக் கருங் குறுவை அரிசியில் சோறாக்கி நல்லெண்ணெ நெய் வார்த்துக் கருப்புக் கட்டி போட்டுத் தின்னவும். அண்டரத்தி வேர் இந்த மருந்திலே கூட்டப் போட்டு கொள்ளவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. எழாம் நாள் முறிக்கவும். விப்புருதி நிற்கும். ~~சூதகத்தின் மேல் விசாளத்துக்கு~~.

உதிரம் காணுகிறதுக்கு மருந்து:-

முக்கொளிஞ்சி பிடி.க, பழங்கிட்டம் கொண்டு வந்து நறுக்கின தூள் படி.க, வெள்ளாட்டுக் கோமாரி படி.உ, புதுச் சட்டியில் இந்த மருந்தைப் போட்டு கோவாரியும் ஊத்தி அந்தச் சட்டி வாய்ப் பிாட்டிலே சீலே வடி கட்டி சூரியன் கிளம்பி வரும் போது எடுத்து வெய்யலில் வைத்து பொழுது போக எடுத்து வீட்டில் வைக்கவும். இந்த மருந்தை அரை உழக்கு இறுத்து உள்ளுக்கு கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். சூதகத்தின் மேல் வீக்கம் காச்சல் இது தீரும். இது கை கண்டது.

கர்ப்பாநுக்குச் சூரணம்:-

செங்கத்தாரிப் பட்டை, அமுக்கிறாக் கிழங்கு, சங்கம் வேர், சங்கங் குப்பி வெள்ளறுக்கு, சிவனார் வேம்பு, ஆயில் பட்டை, பீச்சங் கொட்டை வேர் இவை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து காய விட்டுச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு கரப்பானெனப் பட்டதுக்கு வெருகடிப் பிரமானம் தின்னவும். இதுக்குப் பத்தியமில்லே. இது கை கண்டது.

கரப்பாநுக்குச்-சூரணம்:-

புழு வெட்டுக்கு:-

கடுக்காய் கொண்டு வந்து உடைத்து விரை வாங்கிப் போட்டு அந்த ஓட்டில் காரெள்ளு யிட்டு அந்த ஒடு கொண்டு மூடி அதின் மேல் மஞ்சள் அரைத்து மேலே போத்தி வேலிப் பருத்தித் தழை அரைத்து அதின் மேலே மூடி அதில் மண் சீலே செய்து காய விட்டு எருவு அடிக்கி அதின் மேல் வைத்து அதின் மேல் எருவு அடிக்கி புடமிட்டு வெந்த பிறகு எடுத்து ஆற விட்டு அந்த மேல் மருந்தை தள்ளிப் போட்டு கடுக்காய் ஏழு சந்தனம் போலே அரைத்து கலத்தின் மேலே வைத்துப் பசுவின் வெண்ணெ போட்டு இழைத்து சிமிளில் வழித்துத் தடவ புழு வெட்டுத் தீரும்.

அதிசாரக் கழிச்சலுக்கு, வயத்துக் கழிச்சலுக்கு மருந்து:-

கண்டம்பில் வேர், நல்ல கொளிஞ்சி வேர், கல் கொளிஞ்சி வேர் மூன்றும் தட்டிப் போட்டு சட்டியில் ஒரு படி தண்ணீர் வார்த்து வேக விட்டு தண்ணீர் கால்படியாக இறக்கி வைத்துக் கொள்ளவும். அதின் பிறகு வசம்பு காசிடை.க, மலைதாங்கி காசிடை.க, இரண்டும் சீலே சுத்தி நெருப்பு மேலே வைத்து வெந்த பிறகு அதை எடுத்து இந்தக் கசாயம் இறுத்து இந்த மருந்தை அரைத்துக் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்கு அதிசாரம் கழிச்சல், சுரம் இது முதலான தெல்லாம் தீரும். இதுக்கு பத்தியம் மூன்று நாள் வென்னீரும் சோறும் உண்ணவும். நாலா நாள் பத்தியம் முறிக்கவும்.

வயத்துக் கடுப்புக்கு மருந்து:- 2.1.64.

ஓமத்தை வறுக்கிற போது ஒரு களச்சிக்காய் மருவாதி கருப்புட்டி அந்த சட்டியில் போட்டுக் கிளறி முறத்தில் போட்டு மூன்று உருண்டையாக உருட்டி நேரம் ஒரு உருண்டை தின்னவும். இதுக்கு சீதளக் கடுப்புத் தீரும்.

வெள்ளை சீதளமாய்க் கடுக்கிற கடுப்புக்கு:-

ஒரு சுக்கு எடுத்து நெருப்பின் மேல் வைத்து கருகின பின் அதை எடுத்து மேல் புறணியை சுறண்டிப் போட்டு அரைத்து கறண்டியில் கலக்கித் தயிர் கூட்டித் தின்னவும்.

காச்சலுக்கு தாப சுரத்துக்கு சங்கர வயிரவன் குளிகை:-

துத்தம் காசிடை.8; நாவி காசிடை.7, கெந்தகம் காசிடை.6, வெங்காரம் காசிடை.5, ஊமத்தை விரை காசிடை.4, சுக்கு காசிடை.3, திப்பிலி காசிடை.3 இது வெல்லாம் சேர்த்து வேலிப் பருத்திச் சாறு விட்டு அரைத்து குன்றுமணிப் பிரமானம் உருண்டை பண்ணி நிழலில் காய விட்டு சிமிழில் அடைத்துக் கொள்ளவும். எந்த சுரமானாலும் ஒரு உருண்டை முலைப் பாலிலிட நாவு சுரந் தீரும். உப்பு, புளி தவிர்க்கவும்.

ரச சிந்தாமணி:-

ரசம், கெவுரி பாஷாணம், மஞ்சேசிலை, பச்சை நாவி, அரிதாரம் இதை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து வைத்துக் கொண்டு ஊமத்தஞ் சாறு வார்த்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி இஞ்சி சாத்திலிடஎல்லாச் சுரமும் போகும். வென்னீரும் சோறும் உண்ணவும்.

பித்த சுரத்துக்கு சிந்தாமணிக் குளிகை:-

கெந்தகம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, வெங்காரம் பலம்.க, பாகல் இலைச் சாத்திலரைத்து சிறுபயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் காய வைத்து இந்த உருண்டையை நொச்சியிலை ஒரு கடுக்காய் ரெண்டும் கசாயம் வைத்து அந்தக் கசாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கப் பித்த சுரந் தீரும்.

(வேறு)

இரதம் பலம்.க, கெந்தகம் பலம்.க, நேர்வாளம் பலம்.க, திப்பிலி பலம்.5, இது வெல்லாம் எலுமிச்சஞ் சாறு விட்டு அரைத்து சிறு பயறு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு இஞ்சிச் சாத்திலாவது குளிர்ந்த தண்ணீரிலாவது இடவும். வாத சுரத்துக்கு ஆடா தோடைச் சாத்தில் கொடுக்கவும். இல்லாவிட்டால் செம்முள்ளிச் சாத்தில் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வென்னீரும் சோறும் கொள்ளவும்.

வாத சுரத்துக்கு ஆனந்த வயிரவன்:-

சுறுதிலிங்கம், வெங்காரம், கெந்தகம், சுக்கு, மிளகு; திப்பிலி, கொடிவேலிவேர், இதை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்தி இஞ்சி சாத்திலரைத்து மிளகு பிரமானம் உருண்டை செய்து நிழலில் உலத்தி வைத்துக் கொண்டு வாத சுரத்துக்கு இஞ்சி சாத்தில் ஒரு உருண்டை இடவும். சொன்னபடிக்கு தீரும்.

வாத சுரத்துக்கு சன்னிகா சிந்தாமணி:-

சாதிலிங்கம், நாவி, சுக்கு, திப்பிலி, மிளகு, வெங்காரம், இதை யெல்லாம் ஒரு நிறையாய் கூட்டி எலுமிச்சம் பழச் சாத்தில் அரைத்து மிளகு பிரமானம் உருண்டை செய்து நிழலில் உலத்தி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை யிஞ்சிச் சாத்திலிட வாத சுரம் தீரும்.

வாத சுரத்துக்கு திரிலோக சிந்தாமணி:-

இரதம் பச்சை கெந்தகம், அரிதாரம், சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், மஞ்சேசிலை, துத்தம், துருசு, நேர்வாளம், கடுக்காய், கடுகுரோகணி இது வெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து கையாந்தகரைச் சாத்தி லேழு நாளரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு திப்பிலி கசாயத்திலாவது இஞ்சி கசாயத்திலாவது இட எந்தச் சுரமுந் தீரும். இந்தக் குளிகைக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வென்னீரும் சோறும் மூன்று நாள் கொள்ளவும். நாலா நாள் பத்திய முறிக்கவும்.

(வேறு)

பூசனி விரையும் பெருங்காயமும் காடியிலரைத்துக் கொடுக்கவும். குளிர் சுரம் தீரும். இது கை கண்டது.

தாப சுரத்துக்கு குடிநீர்:-

தேவதாரம், நிலவேம்பு, திப்பிலி, திப்பிலி மூலம், சிறுதேக்கு, சுக்கு, பற்படாகம் ஆடாதோடை முத்தக்காசு ஒரொன்றுக்குக் காசிடை கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். தோஷ சுரம் விடும்.

பழஞ் சுரத்துக்கு குடிநீர்:-

கொத்தமல்லி, சூரிப் பழம், புளி வில்லை வேர் இது குடி நீரிட்டுப் பிசைந்து வடித்து கருப்புட்டி கூட்டி கொடுக்கவும்.

விரோசனத்துக்கு குடிநீர்:-

கடுக்காய், களிப்பாக்கு; சுக்கு, இந்துப்பு, சாறணை வேர், பிரமி,

கொன்றைப் பட்டை அதின் தழை காசாங் சருகு, கடுகுரோகணி, வெள்ளெள்ளி இவை சமன் கூட்டி காடியும் விட்டுக் கொடுக்க வயறு கழியும். இதுக்கு முறிவு தயிருஞ் சோறும் உண்பது.

விரோசனத்துக்கு சூரணம்:-

நெல்லி விளல், ஏலம், லவங்கம், நாகப்பூ ஒரொன்றுக்கு விராகனிடை. 3, மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு சரி சர்க்கரை கூட்டி இள வெந்நீரில் கொள்ள சீதமுள் படக் கலபம். இதுக்கு முறிவு மோரும் சோறும் கொடுக்கவும்.

வாத சுரத்துக்கு குடிநீர்:-

சித்தமுட்டி, பேராமுட்டி, கண்டங்கத்திரி, விஷ்ணு காந்தி, பெருங்காயம் சுக்கு, மிளகு வேலிப் பருத்தி வேர், வில்வ வேர், நெருஞ்சி வேர், முனீனை வேர் ஒரொன்றுக்கு பலம். உ, இடித்து திட்டமாய்க் கூட்டிக் கசாயம் போட்டுக் கொடுக்கவும். தோஷ சுரந் தீரும்.

இருமலால் எடுத்த சுரத்துக்கு குடிநீர்:-

கண்டங்கத்திரி, ஆதவளை, ஆடாதோடை, விஷ்ணு காந்தி, எலுமிச்சம் வேர், முத்தக்காசு, கொடிவேலி வேர், சந்தனம் இது வெல்லாம் கூட்டி ஒரு நிறையாய் கசாயம் வைத்து கொடுக்கவும். இருமல் சுரம் தீரும்.

பால சுரத்துக்கு குடிநீர்:-

கடுக்காய்ப், பேய்ப்புடல், முத்தக்காசு, கொத்தமல்லிகை, சீந்தி தண்டு நெல்லிப்பட்டை, தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இது வெல்லாம் சரி நிறையாய்க் கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். பல சுரந் தீரும். இது கை கண்டது.

சீத சுரத்துக்கு குடிநீர்:-

பேய்ப்புடல், முத்தக் காசு, பற்பாடகம் சீந்தி தண்டு, சுக்கு, கடுகு ரோகணி, கடுக்காய் இவை சமன் கூட்டிக் கசாயம் வைத்துக் கொடுக்கவும். வயறு பேதிக்கும். சுரம் விடும். பேராமுட்டி வேர், பேய்ப்புடல் சுக்கு இவை சமன் கூட்டிக் கொடுக்கவும்.

அதிசாரத்துக்கு குடிநீர்:-

புங்கம் வேர், ஓமம், கனம்பில் வேர், கொளிஞ்சி வேர், வசம்பு, மலை தாங்கி வேர், இவை ஒரு நிறையாய்க் கூட்டிக் கசாயம் வைத்து கொடுக்கவும். அதிசார சுரந் தீரும். இதுக்குப் பத்தியம் கடினமா யிருக்கவும். வெந்நீரும் சோறும் கொள்ளவும்.

குன்மத்துக்கு மருந்து:-

தேங்காய் கண் திறந்து தண்ணீர் ஊத்திப் போட்டு மிளகு வெள் வெங்காயம், கடுகு ஓமம் கொளிஞ்சி வேர் இவை யெல்லாம் அரைத்து தேங்காயில் போட்டு வெள்ளாட்டுப் புழுக்கையும் அதின் கோமியம் வார்த்து அரைத்து தேங்காய் தெரியாமல் பூசி அதைச் சுட்டு வெந்த காயை எடுத்து ஓட்டைத் தள்ளிப் போட்டு அந்த மருந்தை எடுத்து அரைத்து மூன்று நாள் தின்னவும். இதுக்கு பத்தியம் வெள்ளாட்டுப் பால் வார்த்து சோறு தின்னவும். உப்பு, புளி ஆகாது. இதுக்கு குன்மம் எட்டுந் தீரும். இது கை கண்டது.

ரச செந்தூரம்:

ரசம் பத்துக் கழஞ்சு, கெந்தகம் இருபது கழஞ்சு, பாலரசம் பட்டை சாறு வார்த்து அரைத்து ரெண்டு சாமமரைத்து காசிக் குப்பிக்குள்ளே வைத்து குப்பி வாயைக் களிமண் கொண்டு மூடி அதின் மேலே ஏழு சீலை மண் செய்து உலர வைத்துப் பானை யிலே மண்யிட்டு நடுவே குப்பியைவைத்து கீழும் மேலும் மண்சீலை செய்து அடுப்பிலே வைத்துப் பானைத் தாரிலே இரண்டு சாமம் விளக்குப் போலே எரிக்கவும். இரண்டு சாமம் தாமரைப்பூப் போலே எரிக்கவும். அப்பால் இரண்டரை நாள் இரண்டு பந்தம் போலே எரிக்கவும். அதின் பிறகு ஆறவிட்டுக் குப்பியை எடுத்துப் பார்த்தால் செந்தூர மாயிருக்கும். அதை எடுத்து ஒரு பணவிடை தேனில் கொள்ளக் குன்ம மெட்டும் போகும்.

தாளிசை பத்திரிச் சூரணம்:-

தாளிசை பத்திரி, திப்பிலி, திப்பிலி மூலம், செவியம், சுக்கு, கண்டுபறங்கி, வாய்விளங்கம், தும்பராஷ்டகம், மிளகு, லவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, விளாம் பிச்சை வேர், வெட்டிவேர் ஒரொன்றுக்கு விராகனிடை. க, சுக்கு விராகனிடை. க, இது வெல்லாம் சூரணம் செய்து நல்ல வெல்லம் ஒரு அச்சுக் கலந்து வைத்துக்கொண்டு இதுக்குத் தீரும் வியாதி மேக வெட்டை, பித்த வெட்டை, பயித்தியம், வெள்ளை சோகை முதலானதுந் தீரும். இதுக்குப் பத்தியமில்லை.

அரிதார பற்பம்:-

அரிதாரத்தைச் சிறுக உருந்து மருவார்த்தி நருக்கி மெல்லிய சீலையில் முடிந்து மூன்றரை நாழிகை காடியில் போட்டு காடி வத்தக் காய்ச்சி எடுத்து கோமூத்திரம் விட்டரைத்து எருக்கிலை தொரனை வத்தி மூடி புரசஞ்சிராய் சுட்டு நீறு பண்ணி அந்த நிறை தொன்னை மருந்திலே சற்று போட்டு மிஞ்சின மருந்தைச் சட்டியிலே போட்டு

அதின் மேலே தோண்டியை வைத்து தோண்டி தெரியாமல் நீர் கொண்டு மூடி மேலும் மண் சட்டியிலே மூடி பொருந்தச் சந்து வாய்க்குச் சீலை மண் செய்து தொண்ணூறு நாழிகை விளக்கெரிக்கிறது போலே எரிக்கவும். பின்பு எடுத்துப் பார்க்கில் சூரணமாயிருக்கும். இதுக்குத் தீரும் வியாதி சூலைக்கு ஒரு பணவிடை வெந்நீரில் கொடுக்கவும். சன்னிக்கு திரிகடுகு சூரணம் பண்ணி தேனில் கொடுக்கவும். மகோதரம் பிரமியம் இதுக்கு தேனில் கொடுக்கவும்.

ஸோக பற்பம்:-

உருக்கு ஒரு பலம் சிவக்கக் காய்ச்சி மோர், காடி கோமூத்திரம் நல்லெண்ணை காவளைச் சாறு இதுகளிலே ஏழு தரம் இந்தப் பிரகாரம் காய்ச்சித் தேய்க்கவும். அதை ராக அரைத்து இதில் நெல்லிக்காய்க் கெந்தகம் நாலு களஞ்சு இரதம் நாலு களஞ்சு மூன்றுங் கூட்டி கையாந்தகரைச் சாறு விட்டரைத்து கலசத்திலிட்டு ஒடு பொருந்த மூடிச் சந்து வாய் மூன்று சீலை மண் செய்து இதைப் புடமிட்டு எடுத்து திரும்பவும் கையாந்தகரைச் சாத்திலரைத்து இப்படி பத்து புட சுடவும். எருக்கிலைச் சாத்தில் பத்துப் புடமிடவும். இப்படி இருபது புடம் போட்டு எடுக்க நல்ல செந்தூரமாம். இதுக்குத் தீரும் வியாதி குன்மம், மகோதரம், சோகை வயத்து வலி, சன்னி, சகல வாய்வுக்கும் அநுபானத்திலிடவும். இதுக்கு பத்தியம் மூன்று நாள் உப்பு, புளி தவிர்க்கவும்.

(வேறு)

மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு:-

இரும்பைக் கொண்டு வந்து அதின் மேலே சர்க்கரை தேன் வெள்ளாட்டுப் பால் வார்த்து அரைத்து மூக்கில் விடவும் தீரும். இப்படி மூன்று நேரம் விடவும். இது கை கண்டது.

கோரோசனை மாத்திரை:-

சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, அதிமதுரம் விராகனிடை.க, செசதேசசனை நல்ல சீரகம் விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, கொத்தமல்லி விராகனிடை.க, வால்மிளகு விராகனிடை.க, இது வெல்லாம் சேர்த்து இளநீர் விட்டு அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு இந்த மருந்தை மிளகு கசாயத்தில் இடப் பித்த சுரந் தீரும். சுக்கு கசாயத்திலிட சிலேற்பன சுரந் தீரும். சீரக கசாயத்திலிடச் சோகை தீரும். எந்த வித வெட்டைக்கும் இளநீர் கொண்டு வந்து அந்த தண்ணீரிலிட உருண்டையை ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்கு புளி, புகை ஆகாது. இது கை கண்டது.

வங்க பற்பம்:-

யீயம் பலம்.உ, கரண்டியில் போட்டு நல்லெண்ணை குத்தி உருக்கி அதின் பிறகு நல்லெண்ணை மோர் சாறனைச் சார் பச்சை மஞ்சள் சாறு ஒவ்வொன்றில் ஏழு பிரகாரம் உருக்கி ~~அதின் பிறகு நல்லெண்ணை மோர் சாறனைச் சார்~~ சிறு பயறு போலே நறுக்கிக் கொள்ளவும். புளியின்சிராய் சுட்டுச் சாம்பலரைத்துக் கோணிப் பட்டிலே கணக்கப் பூசி குளி குளியாகக் குழித்து ஒன்றுக்கு மருந்து ஒன்றாய் வைத்து பின்பு மறு கோணியப் பட்டிலே அந்தச் சாம்பல் பூசி அந்தப் பொருந்த மூடி அதின் மேலே ஒடு பொருந்த மூடி சந்து வாய் சீலை மண் செய்து காய விட்டு எருவை அடிக்கி அதின் மேலே இந்த ஒட்டை வைத்து அதின் மேலே எருவை அடிக்கி புடம் போட்டு அதின் பிறகு எடுத்துச் சூரணம் பண்ணி வைத்து நரம்புக்கு ஆவாரைக்காய் கசாயத்தில் ஒரு பணவிடை கூட்டிக் கொடுக்கத் தீரும். உழலை மிகுத்தால் வெண்ணெய் வெல்லத்திலிடவும். உழலைக்கு பச்சைப் பனை மட்டை நறுக்கி இடித்து குறுணி நீர் விட்டு நாழியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். கொப்பளிக்கவும். இதுக்குங் கூட்டுங் கறி பிஞ்சி மாங்கிழங்கும் மோர், பால், நெய், புண்ணக்கு யிலைக் கறி கூட்டவும். முருங்கைக் காய் கூட்டவும். கிறுணிக்கு ஒரு பணவிடை வெள்ளாட்டுப் பால் வஞ்சுக் வாழக் கிழங்கு கசாயத்திலிடவும். காடை கவுதாரி கூட்டவும்.

மலட்டு வலிக்கு மருந்து:-

ஊமத்தையிலைச் சாறும் எண்ணையுங் கொடுக்கத் தீரும்: கருப்புட்டி சுக்கு, மிளகு, திப்பிலி; ஓமம், கழச்சிப் பருப்பு; இந்துப்பு வறுத்துப் பொடி பண்ணி சேர்த்துக் கூட்டி நல்லெண்ணையில்க் குழப்பித் தின்னவும். மலட்டு வலி தீரும். குளி நிற்கும். இது கை கண்டது.

ஊது காமாலைக்கு மருந்து:-

வெள்ளாட்டுப் பால் படி அரை, குருவை அரிசி ஒரு சேரை அந்தப் பாலை உலை வைத்து இந்த அரிசியைப் போட்டுப் பொங்கிற போது மாவிலிங்கம் பட்டை விளாங்காய் அளவு அரைத்துக் கூடப் போட்டு வேக வைத்துக் கிளறி இறக்கி சூட்டாத் தின்னவும். இந்தப் பிரகாரம் மூன்று நாள்த் தின்னவும் இதுக்குத் தீரும் வியாதி காமாலை, சோகை, ஊது காமாலை, பாண்டு ரோகம், நீர்க் கோவை மகோதரம் என்னப்பட்டதுக்கும் ஆகும். இதுக்குப் பத்தியம் உப்பு; புளி தவிர்க்கவும். இது கை கண்டது.

ஏலாதி தயிலம்:-

அத்தி ஆலா அரசு யிச்சி இது நாலுதி வகையும் முத்தப் பட்டையாக சிவந்தப் பட்டையாய் வெட்டி வந்து ஒவ்வொன்றுக்கு பலம்.8 இடித்து யிரு தூணி நீர் வார்த்து அதை எட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்து இதில் வெள்ளறுகு கத்தாளைச் சாறு யிருநாளி எண்ணை யிருநாளி விட்டுக் கலந்து அத்தி முகிள் அரச முகிள் அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், யிலுப்பைப்பூ, தாமரை வளையம், செங்களநீர்க் கிழங்கு, பேரீச்சம் பழம்,

செண்பகப்பூ, ஏலம், லவங்கம், லவங்கப் பத்திரி, நாகப்பூ, பச்சிலை, நெய்தல் கிழங்கு, அமுக்கிலாங் கிழங்கு, நன்னாரி ஒரொன்றுக்கு களஞ்சியாகக் கூட்டிப் பால் விட்டு அரைத்து இரண்டு படி பால்விட்டு நாலு நாள்க் காய்ச்சி ஐந்தா நாள் வடித்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பிளவை, கிரந்திப் புண், நீரழிவு, உழலை, பித்த சன்னி, உடம்பு வீக்கம், உள்ளங் கால், எரிச்சல், நீர்க் கடுப்பு, நீர்க்கட்டு பிரமியம் சோகை, ஈளை இருமல் எலும்புருக்கி நோக்காடு ரெத்தப் பிரமியம் வாதம் என்பது இது முதலான வியாதி எல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் நெய், புகை, புளி சோளச் சோறு பறங்கிக்காய், முள்ளிக்காய், பாகல்க்காய், செம்பந்தண்டு, அரைக்கீரை, திலை இது முதலானது நாற்பது நாள் ஆகாது. இது கை கண்டது.

ஏலாதிச் சூரணம் :-

சடாமஞ்சி, கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, வெட்டி வேர், விளாம்பிச்சு, கற்பூரம், கொத்தமல்லிகை, பேரீச்சம் பழம், சாதிக்காய், சாதிப் பத்திரி, அல்லிக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, தாமரை வளையம், முந்திரிக்காய், பழம், சந்தனம், கூகைநீர், தாளி வேர், நெருஞ்சி வேர், வெள்ளை சாறணை வேர், அமுக்கிலாங் கிழங்கு இதை யெல்லாம் ஒரு நிறையாய் நிறுத்து காய வைத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு இதுக்குச் சரி சமன் சர்க்கரை கூட்டிக் கலந்து நெய்யில் வெருகடிப் பிரமாணந் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி க்ஷயம், வெட்டும் குன்மம் ஏழும் பிரமியம் ஏழும் நாலு உஷ்ணம், சோகைக் கட்டு, மேகம் வெட்டை பித்த சன்னி யிருமல் கண் புகைச்சல் முதலியது தீரும்.

ராச பிளவைக்கு மருந்து :-

கருப்புக் கட்டியைக் குழம்பு போலே கரைத்து புண் வாயிலிட்டு அது மேலே சீலை போட்டுக் கட்டவும். ஒரு சாமம் இருக்க விட்டு எடுத்துப் போட்டு சாணிப்பால் எருமைப் பால் கருப்புக் கட்டி பிசைந்து புண் வாயில் கட்டினால் நாலு பக்கமும் உண்டான புழு வெல்லாம் வந்து புண் வாயிலிருக்கும். அதன் பிறகு நெல்லரிசி இடித்து புட்டாக வேக வைத்துப் புண் வாயில் கட்டவும். அந்தப் புண்ணுலே இருந்த புழு வெல்லாம் புட்டிலே வந்து இருக்கும். அதை எடுத்து எறிந்து போட்டு அதுக்கு மேல் எண்ணை போடவும்.

அதுக்கு எண்ணை எரிக்கும்படி :-

வேப்பெண்ணை படி. ½ வெள்ளைக் குங்கிலியம் பலம். ½, வெம்பாடம் பட்டை பலம். க இது மூன்றும் கூட்டி வேக வைத்து இறக்கி ஆற விட்டு அந்த எண்ணை புண் மேலே சீலையில் பிடித்துப் போடவும். இப்படி மூன்று நாள் போடவும். இந்த எண்ணைக்கு எந்த ஆறாத புண்ணும் எல்லாம் ஆறும். இது கை கண்டது.

கண்டமாலைக்கு மருந்து :-

ஆயிரங் காலட்டையைக் கொண்டு வந்து காயப் போட்டு அதை எருமை மோரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும் கண்டமாலை தீரும். இது கை கண்டது.

ஒரண்ட வாதத்துக்கு :-

எருக்கங் கொழுந்து மேல் கொழுந்தைக் கிள்ளிப் போட்டு அடிக் கொழுந்தைக் கிள்ளிக் கொண்டு வந்து மூன்று வெற்றிலையில் எடுத்து அதின் நடுவே வைத்து மடித்துத் தின்னக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் உலக்கைச் சத்தம் மூன்று நாள் காதில் கேட்காமே யிருக்கவும். இதுக்கு ஒரண்டவாதந் தீரும். இது கை கண்டது.

முறை மாறலுக்கு மருந்து :-

நீலிச் செடியை வலது கைக்குள்ளாகச் சுத்தி வந்து அதைக் காச்சல் காறன் பேர் அவன் தாய் தகப்பன பேர் சொல்லி அந்தச் செடியைப் பிடித்து இடது காலை அருத்து கன்னி கழியா பிள்ளை நூற்ற நூலைச் சுத்தி தாபம் கொடுத்து அந்த காய்ச்சல் காரன் கையில் கட்டவும். மூன்று நாள் மாறல் தீரும். இது கை கண்டது. சமுத்திராப் பழம் கோடாசாலை நீலிவேர், வேலிப்பருத்தி வேர், வடார்தோடை வேர் இதைத் தண்ணீரிலரைத்துக் கொடுக்கவும். உள்ளுக்குக் கொடுக்கவும்.

மசநாய் மசநரி கடித்தால் மருந்து :-

கருஊமத்தை வேர் அரைத்து சர்க்கரை கூட்டி பசுவின் பாலில் கொடுக்கவும். வெறி எழும்பும் அவனை பிடித்துக் கட்டிப் போட்டு மறுநாள் எலுமிச்சம் பழச் சாறும் சோறும் கொடுக்கவும் தீரும்.

(வேறு)

அதில் தீராத போனால் எலுமிச்சம் பழச்சாறு விட்டு தலையில் தேய்த்து நூறு குடந் தண்ணீர் விட்டு பத்தியம் முறிக்கவும். மசை தீரும்.

கண் புகைச்சலுக்கு முழுக்கெண்ணை :-

முசுமுசுக்கைச் சாறு படி. க, பொன்னாங்கண்ணிச் சாறு படி. க, கையாந்தகரைச் சாறு படி. க, பசுவின் பால் படி. க, நல்லெண்ணை படி. க, இதை எல்லாம் சட்டியிலே வார்த்து ஆவாரை விறகு கொண்டு எரித்து மெழுகு பதத்தில் கடை சரக்கு

சாதிக்காய்.க, பொடி பண்ணி மிளகு பலம்.க, நணுக்காமல் கஸ்தூரி விராகனிடை.க, கோரோசனை விராகனிடை.க, குங்குமப்பூ விராகனிடை.க, இது வெல்லாம் இந்த சாறு சுண்ட விட்டு இந்தக் கடைச் சரக்கை அதில் போட்டு மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு மூன்று முழுக்கு முழுகவும். இந்த எண்ணெய்க்குத் தீரும் வியாதி கண் புகைச்சல், கண் வெள்ளை, மண்டை இடிப்பு, நீர்ப் பாய்ச்சல் ஒருத்தலை வலி, கண் சிவப்பு இது வெல்லாந் தீரும்.

<u>அமிர்த சஞ்சீவி</u>:-

சுக்கு விராகனிடை.5, மிளகு விராகனிடை.5, ஏலரிசி விராகனிடை.5, நெல்லி வத்தல் விராகனிடை.15 இது வெல்லாம் ஒரு சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு நன்றாய் வேக வைத்து கால்படி தண்ணீர் இருக்க இறக்கி அந்த தண்ணீரை வார்த்து அரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி இந்த உருண்டை இள நீரில் கொடுக்க எந்த எந்த உஷ்ணமெல்லாந் தீரும்.

<u>எட்டு வகைக் கணைக்கு மருந்து</u>:-

பொன்னாங்கண்ணி சமூலம் பிடி.க, விஷ்ணுகாந்தி பிடி.க, சிறுபுள்ளடி பிடி.க, அம்மான் பச்சை அரிசி பிடி.க, பிரியன் மரத்துப் பட்டை பிடி.க, அதின் தழை பிடி.க, அகத்திப் பட்டை பிடி.க, முசுமுசுக்கை பிடி.க, சுரைத்தழை பிடி.க, தூதுவளை சமூலம் பிடி.க, கண்டங்கத்திரி வேர் பிடி.உ, அதின் தழை பிடி.க, தகரைத் தழை பிடி.க, விடத்தல் தருவிலை பிடி.க, குளிமிட்டான் தழை பிடி.க, துளசி பிடி.க, நல்ல துளசி பிடி.க, இந்த மருந்தை யெல்லாம் இருத்து நாழி தண்ணீர் விட்டுப் பிழிந்து கொண்டு சோதத எடுத்துப் போட்டு அடுப்பில் வைத்து ஆவாரை விறகு போட்டு எரித்து அரைப்படி ஆமணக்கெண்ணெய் விட்டு மிளகு, தக்காளிச் சாறு உழக்கு, ஈர வெங்காயம், உழக்கு அரிந்து கூடப் போட்டு இந்த எண்ணெய் ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுக்கவும். இதுக்கு எட்டு வகை கணையும் தீரும். இதுக்கு பத்தியமில்லை. இது கைகண்டது.

<u>சன்னிக்கு எருமைக் கொம்புத் தயிலம்</u>:-

எருமைக் கொம்பு சீவினது படி.½, எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுத்து உருகி வருகிற போது வேப்பெண்ணெய் படி.½, அதில் விட்டு இதுக்குக் கடைச் சரக்கு பெருங்காயம் இரண்டு தேறு, வசம்பு மூன்று, வெள்ளை வெங்காயப் பூண்டு இதை அரைத்து அதிலே போட்டுக் காவிக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடித்துக் கொண்டு சன்னி பட்டதுக்கு வலிப்புக்கும் மேலே தவளை போடவும் தீரும். கை கண்டது.

<u>சூலைக் குட்டோரிக் குளிகை</u>:-

எட்டிப் பட்டை பலம்.5, எலுமிச்சங்காய்.40, பிழிந்து இதில் இந்தப் பட்டையை போட்டு இதுக்குக் கடைச் சரக்கு சுக்கு பலம்.½, நற்சீரகம் பலம்.½, மிளகு பலம்.½ கிராம்பு விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, லவங்கப் பட்டை விராகனிடை.க, கஸ்தூரி விராகனிடை.½ இது வெல்லாம் இந்தச் சாற்றில் போட்டு நாலு நாள் ஊறப் போட்டு அந்த அரைத்து பருத்தி விரைப் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். குதக வாய்வுக்கு ஒரு விராகனிடை சுக்கு.கசாயத்தில் கொடுக்கவும். பித்த சன்னிக்கு எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். பயித்திய வெட்டைக்கு சீரகக் கசாயத்தில் கொடுக்கவும். வெள்ளை விழுகிற பேருக்குப் புரசம் பட்டையை இடித்து வெள்ளாட்டுப் பாலில் போட்டுப் பிசைந்து அதை வடித்து ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள்க் கொடுக்கவும். (சோகை) பிரமியத்துக்கு ஒரு உருண்டை சுக்கு கசாயத்தில் கொடுக்கவும்.

<u>பித்த சன்னிக்கு</u>:-

எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். பயித்தியத்துக்கு சீரக கசாயத்தில் கொடுக்கவும். வெள்ளை விழுகிற பேருக்கு அரசன் பட்டையை இடித்து வெள்ளாட்டுப பாலில் போட்டுப் பிசைந்து அதை வடித்து ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். சோகைக்கு கம்பம் பூடு இடித்து கம்பஞ் சோற்றுத் தண்ணீரில் போட்டு பிசைந்து இறுத்து இதில் ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். கள்ள முடிக்கு கள்ளப் பிணிக்கு வறப் பிணிக்கு நிழுருக்கு இது முதலானதுக்கு திருநீற்றுப் பச்சை தழை, கசக்கு அதில் ஒரு உருண்டை உரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்குத் தவளை யிடவும். இதுக்குப் பத்தியமில்லை.

<u>ஒருத் தலைவலிக்கு மருந்து</u>:-

தேத்தான் விரையை நருக்கி கருகிலே குத்தி விளக்கில் பிடிக்க பத்தி வேகும். அதை அவித்தால் ஊசி போலே புகையும். அந்தப் புகையை மூக்கில் பிடிக்க ஒருத் தலை வலி நிற்கும்.

<u>மூன்று நாள் மாறலுக்கு</u>:-

முருங்கையிலை, மிளகு வெள்ளை வெங்காயம் மூன்றும் நசுக்கிப் பொட்டண மாய்ப் பிடித்து மூக்கிலே பிடிக்கவும். ஒரு நாழிகை கழித்து ரெண்டா நாழிகைக்கு முலைப் பாலில் நனைத்து பிடிக்கவும். மூன்று நாள் மாறல் தீரும். இது கை கண்டது.

<u>வாத பித்த சுரத்துக்குக்கற்கம்</u>:-

சீந்தி தண்டு முத்தினது கொண்டு வந்து மேல்ப் புறணியைச் சீவிப் போட்டு அதை நருக்கித் தண்ணீர் விட்டுப் புளிந்து கறண்டி காய வைத்து அதிலே மாத்தி முரிச்சு வடித்து நாக்குப் பூச்சி எடுத்துக் கழுவிப் போட்டு கறண்டி ~~காய~~ காய வைத்து அதில் இந்த

புழுவைப் போட்டு அதை பற்பமாகச் சேர்த்து கசாயத்தில் போட்டுக் கலக்கி கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். வாத பித்த சுரந் தீரும். பத்தியம், உப்பு, புளி ஆகாது.

<u>சுரத்தின் பேரில் தாகம் எடுத்தால் குடிநீர்</u>:-

தினை அரிசி ரூபாய் அளவு சட்டியில் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் வார்த்து அதில் நாக்குப் பூச்சி ரூபாய் அளவு எடுத்து அதை கழுவிப் போட்டு. இந்த தண்ணீரில் போட்டு வேக வைத்து இறக்கி ஆற விட்டு இந்தத் தண்ணீரை இறுத்துக் கொடுக்கவும். தாகம், சுரம் நிற்கும். இது கை கண்டது.

<u>பித்த சுரத்துக்கு குடிநீர்</u>:-

ஆடாதோடை பற்படாகம், சீந்தித் தண்டு, முத்தக்காசு, விஷ்ணு காந்தி, சித்தமுட்டி, பேராமுட்டி ஒரு நிறையாய் நசுக்குச் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு சுக்கு, திப்பிலி, கொத்தவரம், மிளகு, வெள்ள வெங்காயம் இது ஐந்தும் சீலையில் முடிந்து அந்த சட்டியில் போட்டு அதை ராவடுப்பில் வேக விட்டு அதைக் காலம்பற அந்தப் பொட்டணத்தை எடுத்து அந்தக் கசாயம் கொண்டு அரைத்து அரைத்து அதை உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும்.

<u>வாத சுரத்துக்கு இஞ்சிக் கற்கம்</u>:

இஞ்சி பலம்.க, கொண்டு வந்து மேல் புறணியைச் சுரண்டிப் போட்டு தட்டிக் காய வைத்துக் கோஷ்டம் அக்கிரகாரம், சித்தரத்தை, திப்பிலி, மிளகு, பெருங்காயம், ஏலம், கிராம்பு, ஒரொன்றுக்கு காசிடை.க, அதை வறுத்து நறுக்கி அந்தக் கற்கத்தில் போட்டு ஒரு பணவிடை கஸ்தூரி வாத ராக்ஷசன் ஒரு குளிகை சேர்த்து அரைத்துக் கலக்கிக் குடிக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வாத சுரந் தீரும்.

<u>காச்சலுக்கு தோஷந்துக்கு தாகத்துக்கு</u>:-

முந்திரிப் பழம் சொம்புத் தேன் சேர்த்து நாவில் தடவவும்.

<u>தீராவிட்டால் தளம்</u>:-

கலங்கொம்பு பவழம், சங்கு, செம்பு வெள்ளி பொன்னு மயிலிறகு இதுவெல்லாம் முலைப் பாலில் அரைத்து நாக்கில் தழப் போடவும். நெஞ்சில் தடவவும். இதுக்கு தீராவிட்டால் மயிலெற்கு சுட்டுக் கொம்புத் தேனில் கலந்து நாவில் தளம் போடவும் தீரும்.

<u>சூதக் சன்னி உதிரங் காணுகிறதற்கு</u>:-

காரை பொருமி சமூலங் கொண்டு வந்து உரலிலே யிடித்துப் பிழிந்து அதில் நல்லெண்ணை உழக்கு விட்டு உள்ளுக்கு கொடுக்கவும். மூன்று நேரம் கொடுக்கவும். சூதக சன்னி தீரும். பத்தியம் பசுவின் தயிரும் சோறும் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

<u>நரம்புச் சிலந்திக்கு மருந்து</u>:-

குப்பை மேனி, எருக்கிலங் கொழுந்து, ஈர வெங்காயம், நல்ல சீரகம், விராகனிடை.க, நல்ல வெல்லம் விராகனிடை.8 இது வெல்லாம் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் புகை; புளி ஆகாது. மூன்று நாள் தள்ளவும்.

<u>பித்த குன்மத்துக்கு மருந்து</u>:-

ஊஞ்சல் நாறு வருஷ மரத்தின் பட்டையை வெட்டி வந்து பலம்.20 இடித்து தண்ணீர் விடாத எருமை மோர் மூன்று வள்ள மோரில் இந்தப் பட்டையைப் போட்டுப் பிசைந்து வடித்து சீரகம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, வறுத்துப் பொடி பண்ணி அந்த மோரை வாயகலச் சட்டியில் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இடித்து அந்தத் தூளைப் போட்டு நல்ல வெல்லம் பலம்.5, நறுக்கிப் போட்டு வழித்துக் கலயத்தில் வைத்துக் கொண்டு நேரம் பாக்களவு தின்னவும். இதுக்கு மோரும் சோறும் தின்னவும். எலுமிச்சை ஊறுகாய் கூட்டவும் பித்த சுரம் தீரும்.

<u>நாலு வகை குன்மத்துக்கு பற்பம்</u>:-

பழங்கிட்டம் இடித்து வடிகட்டினது பலம்.க, நாயுருவிச் சாம்பல் பலம்.க, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, இது மூன்றும் வறுத்து நறுக்கி பழைய வெல்லம் பலம்.க, இதை யெல்லாங் கூடக் கலந்து கலசத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்டது நேரம் தின்னவும். இதுக்குப் பத்தியமில்லை. நாலு வகை குன்மமுந் தீரும். இது கை கண்டது.

<u>சிலேத்தும சுரத்துக்கு குடிநீர்</u>:-

நெல்லி நாக்கு, புளிய நாக்கு, வேப்ப நாக்கு நுணா நாக்கு, ஆடாதோடை பற்படாகம் விஷ்ணு காந்தி, சித்தாமுட்டி, பேராமுட்டி, கொளிஞ்சி மேல் விழுந்த எருவு ஒரு நிறையாய்ப் போட்டு தண்ணீர் படி. விட்டு வேக விட்டு அரை படியாகக் காய்ச்சி அந்தக் கசாயத்தில் ஒரு குலைக் குடோரியை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். தாக மெடுத்தால் பத்து வருஷத்து வைக்கல் பழுதைச் சுட்டு தண்ணீரில் போட்டு தெளிய விட்டு இறுத்துக் கொடுக்கவும். சிலேத்தும சுரந் தீரும்.

வில்லைக்காய் ஒரு பலம்.30, வில்வப் பட்டை பலம்.30 இது இரண்டும் இடித்து தாளியில் போட்டு மூன்று வள்ளத் தண்ணீர் வார்த்து நாலிலொன்றாக காய்ச்சி

யிறுத்து அதில் கடைச் சரக்கு நல்ல வெல்லம் பலம்.30 நருக்கிப் போட்டு அதைக் காய்ச்சி பதத்தில் இஞ்சி பலம்.3, மிளகு பலம்.4, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.உ, சித்திரமூலம் பலம்.உ, அதிமதுரம் பலம்.க, இது வெல்லாம் இடித்து தூள் செய்து அந்தப் பாகிலே போட்டுத் தேன் கால்படி கூட் விட்டு மெழுகு பதத்தில் கலசத்தில் அடைத்து வைத்துக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி நெஞ்சு முறிவு, காமாலை, குன்மம், கிரணி, அசீரணம், மூக்கில் நீர்ப் பாச்சல், விக்கல் இளைப்பு, பீனிசம் மூல வியாதி பாண்டுரோகம், யீளை இருமல், வயத்துப் பொருமல் மூத்திரக் கிரச்பிரமியம் இது வெல்லாம் தீரும். புன்னைக் காயளவு ரெண்டு நேரந் தின்னவும். இதுக்குப் பத்தியம் கிரந்திப் பண்டமாகாது. மற்றது கூட்டவும். இது கை கண்டது.

<u>வாத ராட்சதன் குளிகை:-</u>

சித்திர மூலம் பலம்.5, ஓமம் பலம்.5, சுக்கு பலம்.உ, திப்பிலி பலம்.உ, பெருங்காயம் விராகனிடை.உ, காட்டு முருங்கைப் பட்டைச் சாறு விட்டு அதை எல்லாம் அரைத்து குரிக்காய் பிரமாணம் உருண்டை செய்து நிழல் உலத்தி வைத்துக் கொண்டு வாத சன்னிக்கு யிஞ்சிக் கசாயத்திலிடவும். பித்த சன்னிக் சீரக கசாயத்திலிடவும். சிலேத்தும சன்னிக்கு சுக்கு கசாயத்திலிடவும். மாந்தத்துக்கு ஓமம் கசாயத்தில் கொடுக்கவும். பத்தியமில்லை.

<u>~~வயத்தில்~~ வயிற்றில் ரெத்தம் விழுகிறதுக்கு:-</u>

நல்லெண்ணை ரூபாயளவு பசுவின் பால் ரூபாயளவு கா்டி தண்ணீர் ரூபாயளவு, இது மூன்றும் கூட்டி இப்படி மூன்று நாள் கொடுக்கவும். இதுக்கு வய~~த்தில்~~ிற்றில் ரெத்தம் விழுகிறது நிற்கும்.

<u>குழந்தைக்கு அள்ளைத் தாக்கி எடுக்கிறதுக்கு:-</u>

கத்திரி மஞ்சள், கருஞ்சீரகம், வெள்ளை யிண்டு பால், இது மூன்றும் மூன்று காசிடை கூட்டி வார்க்கவும். இப்படி மூன்று நேரம் வார்க்கவும். இது கை கண்டது. திரு நீத்துப் பச்சையைக் கசக்கி மேல் தலை யிடவும்.

<u>பருவரைக்கு என்னை மருந்து:-</u>

சித்தர் மணக்கு முத்து வறுத்து வத்தினது என்னை படி.க, கடைச் சரக்கு சாதிக்காய், பத்திரி, லவங்கப் பட்டை, மிளகு, பெருங்காயம், அரத்தை, திப்பிலி திப்பிலி மூலம், வாய்விளங்கம், கடுகுரோகணி, தெசாவரம், கொத்தமல்லிகை, லவங்க பத்திரி, கண்டு பறங்கி இது வெல்லாம் விராகனிடை.க, சேர்த்து நுணுக்கிப் பொடி செய்து வைத்துக் கொண்டு இந்த என்னையை அடுப்பில் வைத்து ஒரு விறகா யெரித்து பதத்தில் இந்தத் தூளைப் போட்டு துழாவி இறக்கி வடித்துக் கொண்டு அந்தி விடிந்து ஒரு ரூபாயளவு கொடுக்கவும். இப்படி எட்டு நாள் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி பக்கப் பருவரை வீக்கப் பருவரை, ஒடு பளவரை, கடகு பருவரை, கூடு பருவரை இது முதலான வியாதி தீரும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. ஒன்பதாம் நாள் முறிக்கவும்.

<u>சகல நேத்திர வாய்வுக்குங் குளிகை:-</u> incomplete

தாம்பிர பற்பம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கடல் நுரை, நெல்லி வத்தல், வெள்ளைச் சாறணை வேர், கடுக்காய், மலைமஞ்சள், மனிதன் தலையோடு துத்தம், துரிசு, அரக்கு, தேவதாரம், தான்றிக்காய், செங்கழனீர் கோஷ்டம், தேத்தான் கொட்டை, கொட்டாங்கச்சிக் கரி, கோழி முட்டைத் தோல் தொட்டால் சிணுங்கிக் காய் இது வெல்லாம் சரி சமானங் கூட்டி அமுரித வல்லிச் சாத்தில் ஒரு சாமம் அரைத்து பின்பு (முடிவு அடுத்த ஏடுயில்லை).

<u>எந்த வகை காமாலைக்கும் விரோசனம்:-</u>

பிடங்கு நாறிப் பட்டையும் அதின் இலையும் பெருந் தேங்காயளவு ரெண்டும் அரைத்து வெள்ளாட்டுக் கோமயம் படி.½ விட்டுப் பிசைந்து வடிகட்டி கொடுக்கவும். வேதியாம். வென்னீரும் சோறும் கொடுக்கவும். நிற்கும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். வீக்கம் வாங்கிப் போம் பத்தியம் உப்பு, புளி ஆகாது. மூன் நாளப் போய் நாலாம் நாள் முறிக்கவும்.

<u>கண்ணோவு வெண்கருப்பு பூ வெட்டுக்கு மை:-</u>

பொற்கண்ணி வேர், பழம்பாசி வேர், சிறுகீரை வேர், சிறு புள்ளடி வேர், நரிப் பயத்தங் கொடிவேர், பொருமி வேர் இது ஆறும் ஒரு நிறையாகக் கூட்டி நிழலில் உலத்திச் சுட்டுக் கரியாக்கி கலயத்தில் வைத்து பசுவின் வெண்ணை போட்டுக் காசிச் செம்பிலிழைத்து வைத்துக் கொண்டு கண்ணிலிடவும். இதுக்குத் தீரும் வியாதி கண்ணோவு, வெண் கருப்பு, பூ வெட்டு இது மூன்றும் தீரும்.

<u>குக்குடச் சூரணம்:-</u>

கருங்கோழி முத்தினது கொண்டு வந்து அதைச் சட்டியில் வைத்துத் தண்ணீர் வார்த்து சத்தே வேக வைத்து எடுத்துச் சறமூலம் மறுபடி வேறே சட்டியில் வைத்துத் தண்ணீர் வார்த்து வேக விட்டு அதை எடுத்து சிறுகப் பிச்சு உரலிலே யிடித்து பின்னையும் வறுத்து இடித்து இப்படி அந்தக் கரி முடிய மட்டும் யிடித்து எலம்பு முதலான தெல்லாம் பொன்னிறமாய் வறுத்து மறுபடி யிடித்து தூளாய்ச் செய்து வடி கட்டிக் கய்யாந்தகரைச் சாறு விட்டு உக்காய் பொடி போலே யிடித்துக் கொண்டு குன்ம மென்னப் பட்டதுக்கு மூன்று விரல்க் கொண்டு எடுத்துத் தின்னவும். இப்படி ஒரு மண்டலம் தின்னவும். இதுக்குப் பத்தியம் கிரந்திப் பண்டமாகாது. இது பண்ணுகிற போது ஒருவரும் காணாமல் பண்ணுகிறது இது கை கண்டது.

<u>மாட்டுக் கண் வெள்ளைக்கு மருந்து</u> :-

எருக்கம் பாலும், எருமை வெண்ணெயும் ரெண்டும் சாரித்துக் கண்ணில் போடக் கண் மெத்த வீங்கும். மூன்று நேரம் போடக் கண்ணை வெள்ளையுங் கரைந்து கண் தெரியும். இது கை கண்டது.

<u>சலக் கட்டுக்கு கசாயம்</u> :-

புழுங்கலரிசித் தவிடு, பெருக்க நாலு விரல் கொண்டது குப்பை மேனி மூன்று கழச்சிக்காய் மரியாதி வெங்காரம் காசிடை.க, வெண்ணை எழுமிச்சங்காய் மரியாதி சீரகம் தட்டெடை பொரி ரெண்டு படி தண்ணீர் வார்த்து முக்கால் படியாகக் காய்ச்சி சுண்ட வைத்து அதில் வெங்காரம் போட்டுத் துழாவி வெண்ணெயும் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். வலஞ் சலம் விடும். இது கை கண்டது.

<u>திருகு சன்னிக்கு எண்ணை</u> :-

நல்லெண்ணை படி.$\frac{1}{4}$, விளக்கெண்ணை படி.$\frac{1}{2}$, பசுவின் நெய் படி.$\frac{1}{4}$, இது மூன்றும் சேரக் கூட்டி சட்டியில் வார்த்து இதில் வனமூலிகை கரு ஊமத்தை வேர்பலம்.க, கோடைச் சதளம் வேர் பலம்.க, இந்த வேர் வகை யெண்ணையில் போட்டு வேக விட்டு பதத்திலிறக்கி வடித்துக் கொள்ளவும். உள்ளுக்கு காசிடை கொடுக்கவும். மேலுக்கு தவளை போடவும். இப்படி 8 நாள் போடவும். இதுக்குத் திருகு சன்னி தீரும். இதுக்குப் பத்தியமில்லை.

<u>சூலை பதினெட்டுக்கு : எண்ணை</u> :-

கார்போகரிசி பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, வெள்வெங்காயம் பலம்.க, மிளகு பலம்.க, கொடிவேலி வேர் பலம்.க, நஞ்சுண்டான் பட்டை பலம்.க, தகரைவேர் பலம்.க, வெல்லம் பலம்.5, ஆய் பட்டை பலம்.க, நல்ல எண்ணை படி.க, வனமூலிகை எல்லாம் அரைத்து அந்த எண்ணையில் போட்டு வேகவிட்டுப் பதத்தில் கடைச் சரக்கு நறுக்கிப் போட்டு இறக்கி கலசத்தில் வடித்து வைத்துக் கொண்டு காலை மாலை கழச்சிக்காய் மருவாதி தின்னவும். இந்தப் படி ஏழு நாள் தின்னவும். இதுக்கு பத்தியம் நெல்லஞ் சோறும், துவரைப் பருப்புங் கூட்டவும். இதுக்குச் சூலை பதினெட்டுந் தீரும்.

<u>கோரோசினை மாத்திரை</u> :-

சாதிக்காய் விராகனிடை.க, சாதிபத்திரி விராகனிடை.க, கோரோசினை விராகனிடை.உ, அதிமதுரம் விராகனிடை.க, நல்ல சீரகம் விராகனிடை.க, கருஞ்சீரகம் விராகனிடை.க, ஏலம் விராகனிடை.க, கொத்தமல்லி விராகனிடை.க, மிளகு விராகனிடை.க இது வெல்லாம் சேர்த்து இளநீர் விட்டு அரைத்து குரிக் காய்ப் பருமம் உருண்டை பண்ணி நிழலில் உலத்திக் கொண்டு மிளகு கசாயத்திலிடப் பித்த சுரந் தீரும். சுக்கு கசாயத்திலிடச் சிலேத்தும சுரந் தீரும். சீரக கசாயத்திலிட சோகை தீரும். எந்த வெட்டையானாலும் இளநீரில் ஒரு உருண்டை இடத் தீரும். இதுக்குப் பத்தியமில்லை. இது கை கண்டது.

<u>நீர்ப் பீனிசத்துக்கு</u> :-

ஆதண்டை வேர் பட்டை இடித்துச் சூரணம் பண்ணின பொடி பலம்.3, நல்லெண்ணையில் போட்டுச் சூரிய புடம் வைத்து முழுகவும். நீர்ப் பீனிசம் தீரும்.

(வேறு)

திரிமிளகு, கருங் குங்கிலியம் மஞ்சள் வீட்டு ஒட்டடை எலிப் புழுக்கை இம் மட்டும் பொடி பண்ணி சீலையில் தடவி (முடிவு அடுத்த ஏடு இல்லை).

<u>பருவரைக்கு எண்ணை மருந்து</u> :-

சிந்தாமணக் கெண்ணை (முத்து வறுத்து ஊத்தினது) படி.க, கடை சரக்கு, சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கப் பட்டை, மிளகு, பெருங்காயம், அரத்தை, திப்பிலி, வாய்விளங்கம், கடுகுரோகணி, தெசாவரம், கொத்தமல்லி, லவங்கப் பத்திரி, கண்டு பறங்கி இது வெல்லாம் விராகனிடை.க சேர்த்து நறுக்கி பொடி செய்து வைத்துக் கொண்டு இந்த எண்ணையை அடுப்பில் வைத்து ஒரு விறகா எரித்து இந்தத் தூள் போட்டுத் துளாவி இறக்கி வைத்துக் கொண்டு அந்தி விடிந்து ஒரு ரூபாயளவு கொடுக்கவும். இப்படி எட்டு நாள் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி பக்கப் பூளவரை, விக்கல், பருவட்டை, ஒடு பருவரை, கூடு பருவரை இது முதலான வியாதி தீரும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. ஒன்பதா நாள் முறிக்கவும்.

<u>சகல நேத்திர வாய்வுக்கு குளிகை</u> :-

தாம்பிர பற்பம், சுக்கு, திப்பிலி, ஏலம் கடல் நுரை, நெல்லி வத்தல், வெள்ளைச் சாறணை வேர், கடுக்காய், மலை மஞ்சள் மீனின் தலை ஒடு அத்தம், நரிசு, அரக்கு, தேவதாரம், தான்றிக்காய், செங்கள நீர்க் கோஷ்டம், தேத்தாங் கொட்டை, கொட்டாங்கச்சிக் கரி கோழி முட்டைத் தோல் தொட்டால் சிணுங்கிக் காய் இது வெல்லாம் சரி சமன் கூட்டி அமுர்த வல்லிச் சாத்தில் ஒரு சாமம் அரைத்துப் பின்பு பசுவின் கோமியத்தால் ஒரு சாமம் அரைத்து கோவைக்காய் பிரமாணம் உருட்டி நிழலில் உலத்திக் கொண்டு கொம்புத் தேனிலுரைத்துக் கண்ணிலிட நேத்திர வாய்வு தொண்ணூறத்தாறும் தீரும். இதுக்குத் தீரும் வியாதி நீர்ப் பாச்சல்

வென் கடுப்பு, துர்மாங்கிஷம் கண்ணில் பூவு, தலைவலி, நித்திரை யில்லா மலிருக்கிறது நீல காசம் ரெத்தப் படலம் புழு வெட்டு புரை மூடினது தீரும். ஷ்ருத்

<u>வறக் காமாலைக்கு ஊது காமாலைக்கு மருந்து</u>:-

ஆவாரை வேர், எலுமிச்சங்காய் மருவாதி நன்றாக அரைத்து வெள்ளாட்டுப் பாலில் எட்டு நாள் குடிக்கவும். கார்ப்பு, புளி விடவும்.

<u>ஊது காமாலைக்கு</u>:-

ஆமணக்க னிலையை நடு வாங்கிப் போட்டு அரைத்து எலுமிச்சங்காய் மருவாதி எருமைத் தயிரில் வைத்து மூடித் தின்னவும்.

(வேறு)

கழுதை லத்தி ஐந்து கொண்டு வந்து காராட்டுப் பாலில் பிசைந்து கால் படிக்கு யிறுத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். ஊது காமாலை தீரும். உப்பு, புளி தள்ளவும்.

<u>நேத்திர வாய்வுக்கு தலை வலிக்கு எண்ணை</u>:-

பொன்னாங்கண்ணி வேர், சிறுகீரை வேர் இது இரண்டும் சரி கூட்டி முலைப் பாலி விட்டு அரைத்துப் பசுவின் வெண்ணையில் எரித்து மூக்கில் நசியம் பண்ணவும். தலை நோவு தீரும்.

<u>எண்ணை</u>:-

பொன்னாங்கண்ணிச் சாறு படி.க, சிறுகீரைச் சாறு படி.க, கய்யாந்தகரைச் சாறு படி.க, விளக்கெண்ணை படி.க, நல்லெண்ணை படி.க, பசுவின் நெய் படி.க, இது ஆறுங் கூட்டி சூரிய புடம் வைத்துக் கொண்டு காலமே தேய்த்து மூன்று சாம மட்டும் இருந்து பச்சை அரப்புக் கொண்டு வந்து தேய்த்து முழுகவும். இப்படி பத்து முழுக்கு முழுகவும். நேத்திர வாய்வு தீரும்.

<u>பாவைக்கு மருந்து</u>:-

அமுக்கிலாங் கிழங்கு, எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்துப் பூசவும். இப்படி மூன்று நாள் பூசவும். இதுக்குப் பாவை யெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>நீரடைப்புக்கு மருந்து</u>:-

ஆனைக் கொத்தான் காய் மூன்று இலை மூன்று பூ மூன்று கற்பூர சலாசத்து பணவிடை.உ ஈர வெங்காயம் காசிடை.க, இந்த மருந்தை யெல்லாம் அரைத்து வெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

<u>மூக்கில் ரெத்தம் விழுகிறதுக்கு</u>:-

அத்திப் பிஞ்சு அரைப்படி கொண்டு வந்து உரலில் இடித்து எருமை மோர் அரைப்படி விட்டுப் பிசைந்து வடி கொண்டு அதை உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் மூன்று நேரம் கொடுக்கவும். இதுக்குப் பத்தியமில்லை. மூக்கில் ரெத்தம் விழுகிறது தீரும்.

<u>சுரத்தின் பேரில் தாகமெடுத்தால் குடிநீர்</u>:-

தினை அரிசி ரூபாய் அளவு சட்டியில் போட்டு அதில் ஒரு படி தண்ணீர் வார்த்து அதில் நாக்குப் பூச்சி ரூபாயிடை அளவு எடுத்து அதைக் கழுவிப் போட்டு இந்தத் தண்ணீரில் போட்டு இதை வேக விட்டு இறக்கி ஆற விட்டு இந்தத் தண்ணீர் யிறுத்துக் கொ கொடுக்கவும் தாகம் நிற்கும். இது கை கண்டது.

<u>பித்த சுரத்துக்கு குடிநீர்</u>:-

ஆடாதோடை பற்படாகம், சீந்தி தண்டு , முத்தக்காசு, விஷ்ணு காந்தி, சித்தமுட்டி, பேருமுட்டி ஒரு நிறையாய் நிறுத்துச் சட்டியில் போட்டு தண்ணீர் விட்டு சுக்கு, திப்பிலி, தெசாவரம், மிளகு, வெள்ளை வெங்காயம் இது ஐந்தும் சீலையில் முடிந்து அந்தச் சட்டியில் போட்டு அதை ராவடுப்பில் வேக விட்டு காலம்பற அந்தப் பொட்டணத்தை எடுத்து அந்தக் கசாயங் கொண்டு அரைத்து அதை உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். பித்தம் நிற்கும்.

<u>சிலேத்தும சுரத்துக்கு குடிநீர்</u>:-

நெல்லி நாக்கு, புளிய நாக்கு, வேப்ப நாக்கு, நாவல் நாக்கு, ஆடாதோடை பற்படாகம் விஷ்ணு காந்தி, சித்தாமுட்டி, பேராமுட்டி, சொளிஞ்சி மேல் வந்த எருவு ஒரு நிறையாய்ப் போட்டுத் தண்ணீர் படி.௩, விட்டு வேக விட்டு அரைப் படியாகக் காய்ச்சி அந்தக் கசாயத்தில் ஒரு கூலை குடோரியை உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நேரம் கொடுக்கவும். பத்து வருஷத்து வைக்கல் பழுதையை சுட்டுத் தண்ணீரில் போட்டுத் தெளிய விட்டு யிறுத்துக் கொடுக்கவும் சிலேத்தும சுரந் தீரும்.

<u>நாலு வகை குன்மத்துக்கு பற்பம்</u>:

பழங்கிட்டம் இடித்து வடி கட்டினது பலம்.உ, நாயுருவிச் சாம்பல் பலம்.க, ஓமம் பலம்.க, சுக்கு பலம்.க, மிளகு பலம்.க, இது மூன்றும் வறுத்து நறுக்கிப் பனை வெல்லம் பலம்.க, இதை எல்லாங் கூட்டிக் கலந்து கலசத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல்க் கொண்டது ரெண்டு நேரமும் தின்னவும். இதுக்குப் பத்தியமில்லை. நாலு வகைக் குன்மமுந் தீரும். இது கை கண்டது.

****

சு.ச: 2.1.64.

முற்றும்.

****

Verified
17.9.64

128